# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## DARPG செயலாளர் திரு.வி.ஶ்ரீநிவாஸ் இலங்கை விஜயம்

இந்திய அரசாங்கத்தின் நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை (DARPG), பணியாளர் நலன், பொதுமக்கள் குறை தீர்ப்பு மற்றும் ஓய்வூதியங்கள் அமைச்சகத்தைச் சேர்ந்த இந்திய தூதுக்குழு ஒன்று நிர்வாக சீர்திருத்தங்கள் மற்றும் பொதுமக்கள் குறைதீர்ப்புத் துறை பொதுச் செயலாளரும் நல்லாட்சிக்கான தேசிய மையத்தின் (NCGG), பணிப்பாளர் நாயகமுமான திரு. வி. ஶ்ரீநிவாஸ் அவர்கள் தலைமையில் 2024 ஜூலை 07-09 வரை மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இலங்கைக்கு வருகை தந்திருந்தது. DARPG இணைச் செயலாளர் திரு. N. B. S. ராஜ்புத், NCGG தலைமை நிர்வாக அதிகாரி திருமதி. பிரெஸ்கா மேத்யூ, NCGG இணைப் பேராசிரியர் டாக்டர் அசுதோஷ் போல் சிங், மற்றும் NCGG ஆராய்ச்சி இணைப்பதிகாரி டாக்டர் முகேஷ் பண்டாரி ஆகியோர் இந்த தூதுக்குழுவில் அங்கம் வகித்திருந்தனர். இந்தியாவில் இலங்கை சிவில் சேவை அதிகாரிகளின் ஆளுமை விருத்திக்கான இருதரப்பு ஒத்துழைப்பிற்கான நடைமுறைக் கட்டமைப்பை மேம்படுத்துதல் மற்றும் இந்தியாவின் நல்லாட்சி செயன்முறைகளை இலங்கையில் நடைமுறைப்படுத்துவதற்கான சாத்தியமான வழிகள் குறித்து இந்த விஜயத்தின்போது முக்கியமாக கவனம் செலுத்தப்பட்டது.

2. இலங்கை பிரதமர் மாண்புமிகு தினேஷ் குணவர்த்தன, உள்நாட்டலுவல்கள் இராஜாங்க அமைச்சர் கௌரவ அஷோக பிரியந்த ஆகியோரைச் சந்தித்த இத்தூதுக்குழுவினர், இலங்கை ஜனாதிபதியின் செயலாளர் திரு E M S B எக்கநாயக்கா மற்றும் இலங்கை பிரதமரின் செயலாளர் திரு அநுர திஸ்ஸநாயக்கா ஆகியோரையும் சந்தித்திருந்தனர். அத்துடன் பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திரு பிரதீப் யசரத்ன அவர்களையும் இத்தூதுக்குழு சந்தித்திருந்தது.

3. இலங்கை அபிவிருத்தி நிர்வாக நிறுவகத்திற்கு விஜயம் செய்திருந்த இக்குழுவினர், அந்நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் திரு நாலக கலுவேவா அவர்கள் தலைமையிலான முகாமைத்துவ பிரிவினர் மற்றும் பீடங்களுக்கு பொறுப்பான அதிகாரிகளுடனும் சந்திப்புகளை மேற்கொண்டிருந்தனர். அத்துடன் NCGG இல் பயிற்சிகளைப் பெற்ற இலங்கையைச் சேர்ந்த அதிகாரிகளிடமிருந்தும் அவர்கள் நேர்மறையான பின்னூட்டத்தினைப் பெற்றிருந்தனர். இதேவேளை SLIDAவில் நடைபெற்ற விசேட நிகழ்வொன்றில் “மத்தியமயமாக்கப்பட்ட பொதுமக்கள் குறை நிவர்த்தி திட்டம்; SMART அரசாங்கத்துக்கான ஓர் அடித்தளம்” எனும் தலைப்பில் DARPG செயலாளர்

அவர்கள் உரை நிகழ்த்தியிருந்தார். இந்த நிகழ்வில் இலங்கை அரசாங்கத்தின் சிரேஸ்ட அதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் SLIDA முகாமைத்துவத்தினர் பங்கேற்றிருந்தனர்.

4. மேலும், கொழும்பு மாவட்டச் செயலகத்தின் சம்பந்தப்பட்ட பிரிவுகளால் தரவு சேகரிப்பு மற்றும் பதிவுகள், சமூக சேவைகள், அனர்தத நிவாரணம், MSME வலுவூட்டல், ஒன்றிணைந்த எல்லை முகாமைத்துவம் உட்பட பல்வேறு விடயங்கள் குறித்து வழங்கப்படும் சேவைகள் மற்றும் அத்துறைகளின் மாதிரிகள் தொடர்பான உள்ளீடுகளைப் பெறுவதற்காக இத்தூதுக்குழுவினர் கொழும்பு மாவட்டச் செயலகத்திற்கு விஜயம் செய்து அரசாங்க அதிபர் திரு கினிகே பிரசன்ன ஜானக குமார அவர்களைச் சந்தித்து உரையாடியிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

5. இந்தியாவில் இலங்கை சிவில் சேவை அதிகாரிகளுக்கான ஆளுமை விருத்தி செயற்பாடுகளில் இருதரப்பு ஒத்துழைப்பினை மேலும் வலுவாக்குவதற்கான வழிமுறைகளை ஆராய்வதற்காக பிரதமரின் செயலாளர் திரு திஸ்ஸநாயக்கா அவர்கள் தலைமையிலான பேராளர்கள் 2024 பெப்ரவரியில் இந்தியாவுக்கு மேற்கொண்ட விஜயத்தின் அடிப்படையில் இந்திய தூதுக்குழுவினரின் இந்த மூன்று நாள் விஜயமானது மேற்கொள்ளப்பட்டிருந்தது. நாட்டின் சிரேஸ்ட மற்றும் நடுத்தர பதவிதாரிகளுக்கான மூன்று குறுகியகால ஆளுமைவிருத்தி பயிற்சிகளின் அங்கமாக இதுவரை கிட்டத்தகட்ட 100 இலங்கையைச் சேர்ந்த சிவில் சேவை அதிகாரிகள் NCGG இல் பயிற்சிகளை நிறைவு செய்துள்ளனர். இந்திய தூதுக்குழுவினரின் இலங்கை விஜயத்தின் போது மேற்கொள்ளப்பட்ட விரிவான சந்திப்புகள், இந்தியாவில் இலங்கை அதிகாரிகளுக்கான உத்தேசித்துள்ள நீண்ட கால ஆளுமை மேம்பாட்டு திட்டங்களை சிறந்த முறையில் கட்டமைக்க உதவியது. இதனடிப்படையில், மத்தியப்படுத்தப்பட்ட மக்கள் குறைகளை நிவர்த்தி செய்யும் பொறிமுறை, நிர்வாக சீர்திருத்தங்கள், ஆளணி நிர்வாகம், ஓய்வூதிய சீர்திருத்தங்கள், மின்-அலுவலகம், கொள்முதல் மறுசீரமைப்பு, காணி நிர்வாகம், முதலியன உட்பட இலங்கை தரப்புக்கு பொருத்தமான துறைகள் மற்றும் ஆர்வமான விடயங்கள் குறித்து இப்பிரதிநிதிகள் கவனஞ்செலுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**********************

கொழும்பு

10 ஜூலை 2024